**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 141/2017 |
| Prosecution Witness | : | அ.சா.24 |
| Name | : | தமிழ்செல்வன் |
| Father's/Husband Name: | : | ஆறுமுகம் |
| Address : | : | 1/19, பாரதிநகர், சேலம் மாவட்டம். |
| Age | : | 66/2024 |

தேதி: 01/02/2024

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **( எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

1.நான் தற்போது தமிழக காவல்துறையில் பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு நான் பெரம்பலூர் மாவட்ட வணிகவியல் குற்றபுலனாய்வு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றினேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரிலும், நான் பணிபுரிந்த காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன்.

2.கடந்த 2000 வது வருடம் சென்னை சிசிஐடபிள்யூ சிஐடி அலுவலகம் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து சி.நம்பர் 568/2000 , 6/2000 மூலமும், மதுரை சிசிஐடபிள்யு சிஐடி காவல் துணைகண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து சி.நம்பர் 53/MSD/.2000 மூலமும், தபால் மூலமாக

CMP-DIGI

பெரம்பலூர் மாவட்ட துணை பதிவாளர்(கூட்டுறவு துறை), மகாலிங்கம் என்பவரால் 05/06/2000 தேதியிட்ட ந.க.எண்.2717/1998 ச.ப. மூலமாக கொடுக்கப்பட்ட புகாரினை நான் பெற்று , அந்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையை பெரம்பலூர் CCIW-CID காவல் நிலைய குற்ற எண்.4/2000, இதச பிரிவுகள் 408,477-A ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.44**. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.45.(இந்த ஆவணங்கள் ஏற்கனவே CC 133/2017 என்ற வழக்கில் அ.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)** மேற்கண்ட புகாருக்கு முன்பு இதே மகாலிங்கம் என்பவரால் 04/05/2000 அன்று விசாரணை அறிக்கை அளித்து காவல் கண்காணிப்பாளருக்கு புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாரும் எங்களுக்கு அனுப்பட்டு இருந்தது. அந்த 04/05/2000 தேதியிட்ட புகார் **அ.சா.ஆ.46.** அந்த விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.47. (இந்த ஆவணங்கள் ஏற்கனவே CC 133/2017 என்ற வழக்கில் அ.சா.ஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)** பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை புகாருடன் அரியலூர் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

3. பின்பு இந்த வழக்கை விசாரணைக்காக எடுத்துக்கொண்டு தொண்டமாந்துறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு தக்க தகவலின் அடிப்படையில் சென்று இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் கணபதி, சையது அப்துல் சலீம், பிச்சை, ஆகியோர்களை 09/08/2000 அன்று 10.45 மணிக்கு கைது செய்து, கைது பற்றிய தகவல்களை உறவினர்களுக்கு

CNV.io

கூறி பின்பு எங்களது காவல் நிலையத்திற்கு மதியம் 13.00 மணிக்கு கொண்டுவந்தேன். மூன்று எதிரிகளையும் தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

4. பின்பு 24/08/2000 அன்று சாட்சி மகாலிங்கம், துணை பதிவாளர் என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30/08/2000 அன்று சாட்சிகள் திருமலை, பெரியசாமி,ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 04/10/2000 அன்று சாட்சிகள் ஆரோக்கிய மேரி, சின்னத்தாயி, கந்தசாமி,ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24/10/2000 அன்று சாட்சி ராயப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 03/11/2000 அன்று சாட்சிகள் அமலதாஸ், அம்மணி, சரசு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05/12/2000 அன்று சாட்சிகள் ஜார்ஜ், சிபியோன், சபரிவேல், பழனியம்மாள், ஜெயசீலராணி, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11/11/2000 அன்று சாட்சி பிரான்சிஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இந்த வழக்கு சம்மந்தமான ஆவணங்களை ஒப்படைக்க வேண்டுமென நான் துணை பதிவாளர் பெரம்பலூர் அவர்களுக்கு 17/07/2000 அன்று நான் கடிதம் அனுப்பினேன். பின்பு நான் பணிமாறுதல் ஆனதால் என்னால் விசாரணையை தொடர முடியவில்லை. ஆனால் நான் பணி மாற்றம் செய்யப்பட்ட வரை என்னால் இந்த வழக்கிற்கான ஆவணங்கள் பெறப்படவில்லை. புகாருடன் கீழ்க்ண்ட ஆவணங்கள் எங்களால் பெறப்பட்டது.

1.வங்கியின் உறுப்பினரான திருமலை என்பவர் 16/10/1998 அன்று பெரம்பலூர் கூட்டுறவு துணை பதிவாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியள்ளார். அந்த கடிதத்தை இத்துடன் தாக்கல் செய்கிறேன். அது **அ.சா.ஆ.48.(இந்த ஆவணம் ஏற்கனவே CC 133/2017 என்ற வழக்கில் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)**

2. தொண்டமாந்துறை தொடக்க வேளாண்மை வங்கியின் முறைகேடு நடந்தது குறித்து பிரிவு 81 ன் கீழ் விசாரணை அதிகாரியை 16/10/1998 அன்று செயல்முறை ஆணை ந.க.எண். 2717/1998 வே.சே.ச. மூலம் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த செயல்முறை ஆணை எண். **அ.சா.ஆ.49 . (இந்த ஆவணம் ஏற்கனவே CC 133/2017 என்ற வழக்கில் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)**

3. ந.க.எண். 2717/1998 நாள் 21/01/1999 வே.சே.ச. மூலம் விசாரணைக்கான 2 மாத காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டு துணை பதிவாளர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவு **அ.சா.ஆ.50 . (இந்த ஆவணம் ஏற்கனவே CC 133/2017 என்ற வழக்கில் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)**

4.ந.க.எண். 2717/1998 வே.சே.ச. நாள் 16/03/1999 வே.சே.ச. மூலம் விசாரணைக்கான காலம் ஒரு மாத காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டு துணை பதிவாளர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த

Verdictum.in

உத்தரவு**அ.சா.ஆ.51 .(இந்த ஆவணம் ஏற்கனவே CC 133/2017 என்ற வழக்கில் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)**

5. ந.க.எண். 2717/1998 வே.சே.ச. நாள் 12/04/1999 வே.சே.ச. மூலம் விசாரணைக்கான காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டு 15/04/1999 க்குள் முடித்து அறிக்கை சமர்பிக்கவேண்டுமென துணை பதிவாளர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவு**அ.சா.ஆ.52 .(இந்த ஆவணம் ஏற்கனவே CC 133/2017 என்ற வழக்கில் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)**

6. ந.க.எண். 2717/1998 வே.சே.ச. நாள் 19/05/1999.மூலம் விசாரணைக்கான காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டு 31/05/1999 க்குள் முடித்து அறிக்கை சமர்பிக்கவேண்டுமென துணை பதிவாளர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவு **அ.சா.ஆ.53 .(இந்த ஆவணம் ஏற்கனவே CC 133/2017 என்ற வழக்கில் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)** பின்பு இவ்வழக்கு கோப்பை எனக்கு பிந்தைய விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன்.

**<u>2 முதல் 4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கத்திற்கான புகார் எந்த தேதியில் கிடைக்கப்பெற்றது என எனக்கு தெரியவில்லை ஆனால் 09/08/2000-க்கு முன்பு கிடைத்தது. விசாரணை அதிகாரி தனது விசாரணை அறிக்கை துணைப்பதிவாளர் மகாலிங்கத்திடம் எப்போது சமர்ப்பித்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை.

LAW

விசாரணை அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட தேதியாக 29/11/1999 என காணப்படுகிறது ஆனால் அந்த விசாரணை அலுவலரின் கையொப்பத்துடன் தேதி இடப்படவில்லை. 01/12/1999 அன்று பெறப்பட்டதாக துணைப்பதிவாளர் அலுவலகம் முத்திரை விசாரணை அறிக்கையில் காணப்படுகிறது என்றால் சரிதான்.

2. முதல் தகவல் அறிக்கையில் காலதாமதம் ஏதும் இல்லை என தான் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை துணைப்பதிவாளர் அவரது புகாரில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த போது எங்களது கணக்குப்படி எதிரிகளாக மொத்தம் 46 நபர்களை குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் விசாரணை அதிகாரியை விசாரணை செய்யவில்லை. புகாருடன் இணைக்கப்பட்டதாக கூறப்படும் இந்த ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது.

3. திருமலை என்பவர் கொடுத்ததாக கூறப்படும் அ.சா.ஆ.6 கடிதத்தை நான் எனது விசாரணையின் போது கைப்பற்றவில்லை. திருமலை என்பவரை நான் விசாரணை செய்துள்ளேன். அவருக்கான கடிதத்தை நான் விசாரணையின் போது பெற்றுக்கொண்டேன். அந்த கடிதத்தை திருமலை என்பவர் பெரம்பலூர் கூட்டுறவு துணைபதிவாளார் அவர்களுக்கு அனுப்பியுள்ளார். தனிப்பட்ட முறையில் நான் இந்த

கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன் என திருமலை இந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. 16/10/1998 அன்று இந்த கடிதத்தை துணைப்பதிவாளர் அவர்கள் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதற்கான குறிப்புகள் இந்த கடிதத்தில் காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த கடிதத்தில் ஜான் கென்னடி என்பவரின் கணக்கில் மோசடி நடைபெற்றது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த ஜான் கென்னடியை மற்றும் பிற நபர்கள் குற்றம் முறை வீட்டில் ஈடுபட்டதாக நான் எனது விசாரணையின் போது விசாரணை செய்யவில்லை. திருமலை எனது விசாரணையின் போதும் ஜான் கென்னடி என்பவரின் கணக்கில் ஏற்பட்ட மோசடியைத் தவிர வேறு யாருடைய கணக்கிலாவது மோசடி ஏற்பட்டது என பெயரை குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் இல்லை.

4. அ.சா.ஆ.2 புகாரை பெறுவதற்கு முன்பு அ.சா.ஆ.4 புகார் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த இரண்டு புகாரிலும் எந்த தேதியில் எங்களது கண்காணிப்பு அலுவலகத்தால் பெறப்பட்டது என கையொப்பமோ முத்திரையோ உள்ளதா என்றால் 01/07/2000 மதுரை துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களால் பெறப்பட்டுள்ளதாக காணப்படுகிறது. மேலும் காவல் கண்காணிப்பாளர் பெற்றதற்கான கையொப்பமும் பெற்றதாக நினைவில் இல்லை. இந்த குறிப்பும் அ.சா.ஆ.4 புகாரில் காணப்படுகிறதே தவிர அ.சா.ஆ.2 ல் காணப்படவில்லை என்றால் அ.சா. ஆ.2 ல் 12/06/2000 என காவல்

CVTL Copy

கண்காணிப்பாளரின் முத்திரை காணப்படுகிறது. முதலில் எங்களால் பெறப்பட்ட புகாரில் முகாந்திரம் இல்லை என சட்ட நடவடிக்கைகள் கைவிடப்பட்டது என்றால் சரி அல்ல. நான் 09/08/2000 அன்றுதான் இந்த வழக்கினை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை பதிவு செய்வதற்கு முன்பே விசாரணைக்காக இந்த வழக்கின் ஆவணங்களை கேட்டு பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவு துணை பதிவாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதன்படி ஆவணங்களை ஒப்படைத்து விட்டனர் என்றால் சரியல்ல. நான் ஆவணங்களை பெற்று பரிசீலித்து இந்த வழக்கில் நடவடிக்கை ஏதும் தேவையில்லை என கைவிட்டு விட்டேன் என்றாலும் அதன் பிறகு தான் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரி அல்ல. பின்பு வெளிநபர்கள் கொடுத்த அழுத்தத்தினால் இந்த வழக்கில் நாங்கள் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கான விசாரணை காலத்தை நீட்டித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளோம் ஆனால் அந்த கடிதங்கள் பற்றி எனக்கு தெரியவில்லை. விசாரணை அறிக்கையை குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணை அலுவலரால் முடித்து தாக்கல் செய்யாததால் நானும் இந்த வழக்கிற்கான விசாரணையை கைவிட்டுவிட்டேன் என்றாலும் பின்பு அதே புகாருக்கு மேலதிகாரிகள் கொடுத்த அழுத்தத்தினால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்

CMD

வழக்கில் சாட்சியம் அளித்தபடி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரி அல்ல. நான் சாட்சிகளை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முதலாம் எதிரி தரப்பில் :**

2 முதல் 4 எதிரிகள் செய்த விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கூறியதால் அது அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate No.I,

Perambalur.

Cv Sandhya